செ.வெ.எண்.07 நாள்: 05.04.2019

**தூத்துக்குடி லேடிஸ் ரிக்ரியேஷன் கிளப் மற்றும் வேலவன் கைப்பர் மார்கெட் ஆகிய இடங்களில் வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

---

தூத்துக்குடி லேடிஸ் ரிக்ரியேஷன் கிளப் மற்றும் வேலவன் கைப்பர் மார்கெட் ஆகிய இடங்களில் வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (05.04.2019) நடைபெற்றது. நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள் பேசியதாவது:-

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவுப்படி, நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் எந்த ஒரு வாக்காளரும் விடுபடக்கூடாது என்பதற்காக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தூத்துக்குடி மாவட்டத்திலும் வாக்களிப்பதன் அவசியம் குறித்து வாக்காளர்களிடம் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக 18 வயது பூர்த்தியடைந்த இளம் வாக்காளர்கள் நடைபெறவுள்ள தேர்தலில் வாக்களிக்க வேண்டும் என்பதற்காக மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இந்திய தேர்தல் ஆணையம், நடைபெறவுள்ள தேர்தலில் மாற்றுத்திறனாளிகளும் வாக்களிக்க செய்ய வேண்டும் என தெரிவித்துள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் உள்ள வாக்குச்சாவடி மையங்களில் மாற்றுத்திறனாளிகள் வாக்களிக்க பல்வேறு வசதிகள் செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக சாய்வு தளம் வசதிகள், கழிப்பறை வசதிகள், குடிநீர் வசதி உள்ளிட்ட வசதிகள் செய்யப்பட்டு வருகிறது. வாக்காளர்கள் எந்த ஒரு பரிசு பொருட்கள், பணம் பெறாமல் நேர்மையாக வாக்களிக்க வேண்டும்.

இந்திய தேர்தல் ஆணையம், தேர்தல் நன்னடத்தை விதிமுறைகளை மீறும் நபர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளது. தேர்தல் தொடர்பான புகார்களை தெரிவிக்க C Vigil App பயன்படுத்தப்படுகிறது. இதில் புகார்கள் பதிவேற்றம் செய்தால் மாவட்ட கட்டுப்பாட்டு அறைக்கு வரும். பின்னர் சம்பந்தப்பட்ட சட்டமன்ற தொகுதியில் கண்காணிப்பு பணியில் ஈடுபடும் பறக்கும் படை அலுவலர்களுக்கு அனுப்பி வைத்து 100 நிமிடத்திற்குள் புகார்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து பதிவேற்றம் செய்யப்படும். மேலும், தேர்தல் தொடர்பான புகார்களை 1950 என்ற இலவச தொலைபேசியில் தெரிவிக்கலாம். மாவட்ட நிர்வாகத்தின் மூலம் 24 X 7 செயல்படும் தேர்தல் கட்டுப்பாட்டு அறை தொலைபேசி எண் 1800-425-8541 என்ற எண்ணிலும் தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம். இரவு 10 மணிக்கு மேல் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டால் புகார் தெரிவிக்கலாம். நமது மாவட்டத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகளை கண்காணிக்க 84 பறக்கும்படை குழுவினர் தேர்தல் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த தேர்தலில் 71 சதவிதம் வாக்குகள் பதிவாகியுள்ளது. நடைபெறவுள்ள தேர்தலில் 100 சதவீதம் வாக்குகள் பதிவு செய்ய அனைத்து வாக்காளர்களும் தவறாமல் வாக்களிக்க வேண்டும் மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள் பேசினார்.

அதனைத்தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள், தேர்தல் விழிப்புணர்வு வினாடி வினா போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினார். மேலும், நடைபெறவுள்ள தேர்தலில் 100 சதவீதம் வாக்காளர்கள் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். வாக்காளர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வேலவன் கைப்பர் மார்கெட்டில் போடப்பட்டிருந்து தேர்தல் விழிப்புணர்வு கோலத்தினை பார்வையிட்டார்.

நிகழ்ச்சியில், தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் திரு.வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப., மகளிர் பொழுது போக்கு சங்கம் பொருளாளர் திருமதி.சாந்தி, துனைத் தலைவர் திருமதி.தேன்மதி, வேலவன் கைப்பர் மாக்கெட் உரிமையாளர் திரு.தங்கவேலு, மேலாளர் திரு.பிரின்ஸ் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.